# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 22 October அக்டோபர் 2021

ஆண்டு சந்தா ரூ. 120/- தனிப் பிரதி ரூ. 10/- வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




கௌரவ ஆசிரியர் BETTY CHOATE ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 8 |
| வாலிபர் பகுதி | 11 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா.** M.Th.,
**R. ஆண்டனி ராஜா.** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்.** M.Sc., D.D., **C. சியாமிலஸ் கார்த்திக்.** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L



## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**

**Jerry Bates & Kingsly Rajah**



**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

கிருபையின் கீதங்கள்

**விபரங்களுக்கு :**

**92 4421 4421, 92 4431 4431**

**பாடல் புத்தகம்**

421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்


**கிருபையுள்ள வார்த்தை**

நம் வாழ்வை வெற்றியுள்ளதாக்கும்
வெற்றி வேந்தர் இயேசுவின் வார்த்தை


**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India






**Send Postal Expenses only and receive The Voice of Truth International**

# வெற்றிகரமான தானியேல்

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



*அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள பெயராலே எனது வாழ்த்துக்களையும் ஜெபங்களையும் அறிவிப்பதில் அகமகிழ்கின்றேன் !*

**தானியேல் 6:28**ல் நாம் இவ்வாறாக வாசிக்கின்றோம், "தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது." ஆகையால் இந்த மாதம், கர்த்தருடைய தாசனாகிய தானியேலின் வாழ்வு எவ்வாறு வெற்றி கரமானதாக இருந்தது? அவர் தனது வாழ்வை வெற்றிகரமானதாக்க என்னவெல்லாம் செய்தார்? என்பதைப் பற்றி நாம் ஆராய்ந்து தியானம் செய்வோம்.

### 1. தானியேல் தீர்மானம் பண்ணினார்

**தானியேல் 1:8** "தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான்,"

தானியேல் தீர்மானம் செய்தார்! வெற்றி பெற வேண்டும் என்றல்ல, தன்னை கறைப்படுத்திக் கொள்ளக் கூடாது என தீர்மானம் செய்தார். நம்மை கறைபடுத்திக்கொள்ளக் கூடாது என்பது, நிச்சயம் ஒருவரை தோல்வியிலிருந்து தடுக்கும் தீர்மானமாகும். ஒருவர் தோல்வியை தவிர்க்கும் தீர்மானமாகும். ஏனெனில், பாவம் என்பது தோல்விக்கு வழி வித்திடும் (யோசுவா 7). அது வெற்றியைப் போல தோற்றமளிக்கலாம் ஆனால் முடிவு தோல்வியே. சில விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் மற்றும் காமன்வெல்த் போன்ற உலகத்தர போட்டிகளில் வென்ற பதக்கங்கள், அவர்கள் செய்த பாவத்தினால் (ஊக்கமருந்து பயன்படுத்தியதால்) பறிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் நன்கு அறிவோம் அல்லவா?.

ஒருவர் தன்னைக் கறைப்படுத்திக்கொள்ள காரணம் அவரின் இருதயமே! அதாவது, அவரின் இருதயத்திலிருந்து வெளிவரும் பாவமே என ஆண்டவர் இயேசு சொன்னார். **மாற்கு 7:20-23** "மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும்,து ஷ்டத்தனங்களும்,க படும்,க ாமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும், புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்."

இருதயத்திற்குள் வைத்திருக்கின்ற கசப்பினாலும் நம்மை நாமே கறைப்படுத்திக்கொள்கின்றோம். மற்றவர்கள் இழைத்த தீங்கை மன்னிக்காமல், 'மன்னிச்சுட்டேன்' என்று சொன்னாலும், மறக்காமல் மனதிலே நினைத்துக்கொண்டிருப்பது அதினிமித்தம் உண்டாகும் கசப்பு வெறுப்பாக மாறும். வெறுப்பு கோபமாக மாறும், கோபம் ஆத்திரமாக மாறி, முட்டாள்தனமான காரியங்களை செய்ய வழிவித்திடும். ஆகையால் தான் வேத வசனம், இப்படிப்பட்ட பாவ காரியங்கள் உள்ளே சென்று நம்மை தவறாக தோல்வியை நோக்கி வழி நடத்திவிடாதபடி இருதயத்தினை பத்திரமாக காத்துக் கொள்ள சொல்லுகிறது. **நீதிமொழி 4:23** "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்." மாபெரும் வெற்றியாளர்களாக வேதாகமம் காண்பிக்கும் ஒவ்வொரு முன்மாதிரிகளிடமும் நாம் இதை காண முடியும். அவர்கள் பாவ இச்சைகளை (ஆசைகளை) வெறுத்துள்ளனர். **எபி 11:25** "அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும், தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு," நாமும் அவ்வாறே தீர்மானம் செய்வது நம் கிறிஸ்தவ வாழ்வை வெற்றிகரமாக நடத்த உதவும்.

### 2. தானியேல் கூடிஜெபித்தார்

**தானி 2:17-19** "பின்பு தானியேல் தன் வீட்டுக்குப்போய், தானும்

தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடே அழியாதபடிக்கு இந்த மறைபொருளைக் குறித்துப் பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்கிறதற்காக, அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் தன்னுடைய தோழருக்கு இந்தக் காரியத்தை அறிவித்தான். பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது. அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்தான்."

தானியேல் கூடி ஜெபிக்கின்ற பழக்கமுடையவராக இருந்திருக்கின்றார். கூடி ஜெபித்தல் என்பது ஆண்டவர் இயேசுவே, நாம் செய்யும்படி ஊக்கப்படுத்திய காரியம். **மத்தேயு 18:19–20** "அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்."

கூடி ஜெபித்தால் கோடி நன்மை பெருகும். ஏனெனில் கூடி ஜெபிக்கின்றவர்களின் நடுவில் நான் இருப்பேன் என ஆண்டவர் வாக்களித்துள்ளார். மேலும், ஒரு மனதோடே கூடி ஜெபிக்கின்ற காரியம் பிதாவினாலே வாய்க்கும் என்றும் வாக்களித்துள்ளார். வாக்குமாறாதவர் நமது ஆண்டவர் இயேசு. ஆகையால், குடும்பமாக, குழுவாக மற்றும் சபையாக அடிக்கடி கூடி ஜெபிப்போம்.

இஸ்ரவேல் மக்கள் கூடி ஜெபித்தனர், மாபெரும் வெற்றியை (மாற்றத்தினை) பெற்றனர் **(2 நாளா 20:13–20)** திருச்சபையார் கூடி ஜெபித்தனர், பேதுரு அற்புதமாக சத்துருவின் கையிலிருந்து விடுதலை பெற்றார் **(அப் 12):** ஆகையால் நாமும் ஒரே மனதுடன் கூடி ஜெபிப்போம்.

## 3. தானியேல் ஆவியானவரால் நிறைந்திருந்தார்

**தானியேல் 6:3** "இப்படியிருக்கையில் தானியேல் பிரதானிகளுக்கும் தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாயிருந்தான். தானியேலுக்குள்வி சேஷித்தஆ விஇ ருந்தமையால்,அ வனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த ராஜா நினைத்தான்."

தானியேலிற்குள் விசேஷித்த ஆவி இருந்தது என்று நாம் வாசிக்கின்றோம். அதாவது தானியேல் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தார். நாம் ஒவ்வொருவரும் நற்செய்தியை கேட்டு, விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி, பாவ மன்னிப்பிற் கென்று திருமுழுக்கு பெற்றுக்கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவரையே வரமாக பெறுகின்றோம். **அப்போ 2:36–38** "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்."

இரட்சிக்கப்பட்ட ஒருவரின் சரீரத்தினை பரிசுத்த ஆவியானவரின் ஆலயம் என்று வேதாகமம் சொல்வதை நாம் வாசிக்கின்றோம். **1 கொரிந்தியர் 6:19–20** "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா?" கிரயத்துக்குக்கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்."

நாம் நமது உள்ளத்தை வேத வசனத்தினால் நிரப்பும் போது, நாம் அந்த வசனங்களை நமக்கு அருளிய **(2 தீமோ 3:15–16)** ஆவியானவரால் நிறைந்திருப்போம். நாம் பாவம் செய்யும்போது பரிசுத்த ஆவியானவரின் உறவிலிருந்து துண்டிக்கப்படுகிறோம். மாறாக, பரிசுத்தமானவைகளை செய்யும் போது அவருடனான உறவில் பெலப்படுகிறோம் **(சங் 51:9–12).**

## 4. தானியேல் உண்மையாக இருந்தார்

**தானியேல் 6:4** "அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி

முகாந்தரம் தேடினார்கள் ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும்க ண்டுபிடிக்கஅ வர்களால்கூ டாதிருந்ததுஅ வன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை." தானியேலிடமிருந்து நாம் கற்றுக்கொள்கின்ற அடுத்த நற்பண்பு, அவர் உண்மையுள்ளவராக இருந்தார். கர்த்தருடைய காரியங்களிலும் உண்மையுள்ளவராக இருந்தார். கர்த்தருக்கு பயந்து வாழ்வதிலும் **(தானி 1:8),** கர்த்தரை மகிமைப்படுத்துவதிலும் **(தானி 2:20-23),** கர்த்தரை தேடுவதிலும் **(தானி 6:10),** என கர்த்தருக்கடுத்த காரியங்களில், அதாவது, மோசேயைப் போல கர்த்தருடைய வீட்டில் உண்மையுள்ளவராக இருந்தார். **எண் 12:7** "என்தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்."

**கர்த்தருடைய சபையில் உண்மையாக இருக்க வேண்டும்.** நாமும் கர்த்தருடைய வீடாகிய **(1 தீமோ 3:15),** அவரது திருச்சபையில் எப்படி இருக்கின்றோம்? அவரை நேரப்பட தேடுவதில், சபைக்கூட்டங்களில் ஈடுபடுவதில், மற்றும் அவரைப் பற்றி அறிவித்து அநேகரை அவருடைய வீட்டில் சேர்ப்பதில், எப்படி இருக்கின்றோம்? வெறும் பார்வையாளரா? அல்லது பங்காளரா? சும்மா வந்துவிட்டு செல்கின்றோமா? வேலைகளை இழுத்துபோட்டு செய்கின்றோமா?

**பேச்சிலே உண்மை வேண்டும்** **சகரியா 8:16** "நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் என்னவென்றால்; அவனவன் பிறனோடே உண்மையைப் பேசுங்கள்; உங்கள் வாசல்களில் சத்தியத்துக்கும் சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்." பைபிள், கூடுமான அளவு உண்மையை பேசுங்கள் என சொல்லவில்லை. மாறாக உண்மையை மாத்திரமே பேசுங்கள் என்கிறது ஏனெனில், பொய் பேசுகின்றவர்கள் நரகத்திலே தள்ளப்படுவார்கள் என எச்சரிக்கின்றது **(வெளி 21:8).**

மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்துவதிலும் உண்மை தன்மை வேண்டும். நம் அன்பு, மாய்மால மானதாகவோ, காரியம் சாதிப்பதற்காகவோ அல்லது சோற்றிற்கு உதவாத ஏட்டு சுரைக்கா போன்றோ இராமல், உண்மையாகவே இருக்கட்டும். **(2 கொரி 8:8)** "இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக்கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும் பொருட்டே சொல்லுகிறேன்."

**ஊழியத்தில் உண்மையாக இருக்க வேண்டும்.** அதாவது, நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலைகள் அல்லது பொறுப்புகளில் உண்மையாக இருக்க வேண்டும். நாம் நமது பொறுப்பை நிறைவேற்றுவதில் முனைப்புடன் உண்மையாக இருக்க வேண்டும். அவைகளை கடனுக்காகவோ ஏதோ கடமைக்காகவோ செய்யாமல், கண்ணும் கருத்துமாக அர்ப்பணிப்புடனே செய்ய வேண்டும். பார்வைக்காக செய்யாமல், கண்ணும் கருத்துமாக அர்ப்பணிப்புடனே செய்ய வேண்டும். பார்வைக்காக ஊழியம் செய்யாமல், பயத்துடனே செய்ய வேண்டும். உண்மையான உழைப்பாளிகளுக்கு பாராட்டும் பரிசும் நிச்சயம் உண்டு. **மத்தேயு 25:20-23** "அப்பொழுது, ஐந்து தாலந்தை வாங்கினவன், வேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து; ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக் கொண்டு, இதோ, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி; நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான். இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து; ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி; நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்."

**உலக பொருட்களிலும் உண்மையாக இருக்க வேண்டும்.** தருகிறேன் என்று சொல்லி வாங்கியிருந்தால் சொன்னபடியே கொடுத்துவிடுங்கள். இரவல் வாங்காதீர்கள், அப்படி வாங்கியிருந்தால் பத்திரமாக கொடுத்து விடுங்கள். கடன் வாங்காதிருங்கள்; வாங்கியிருந்தால் ஒப்புக் கொண்டபடியே கொடுத்துவிடுங்கள். **லூக்கா 16:11-12** "அநீதியான உலகப்பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால்,ய ார்உ ங்களைந ம்பிஉ ங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?"

## 5. தானியேல் தேவனிடத்தில் விசுவாசமாக இருந்தார்

**தானியேல் 6:23** “அப்பொழுது ராஜா தன்னில் மிகவும் சந்தோஷப்பட்டு, தானியேலைக் கெபியிலிருந்து தூக்கிவிடச் சொன்னான். அப்படியே தானியேல் கெபியிலிருந்து தூக்கி விடப்பட்டான். அவன் தன் தேவன் பேரில் விசுவாசித்திருந்தபடியால், அவனில் ஒருசேதமும் காணப்படவில்லை.” அடுத்ததாக நாம் தானியேலிடம் கவனிக்கின்ற வெற்றிக்கான நற்பண்பு, அவர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவராக இருந்தார். தனது விசுவாசத்தினை காக்க தைரியமாக போராடினார். நாமும் நமது விசுவாசத்தினை போராடி காக்க வேண்டியவர்கள் அது மிகவும் அவசியமானது. **யூதா 1:3** “பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது.”

தனது உயிர் போய்விடும், கொடுமையான முறையில் மரணம் வந்து நேரிடும் என்ற போதும், தானியேல் தனது விசுவாசத்தில் உறுதியாக இருந்தார். அவர் விசுவாச உறுதி வெறிப்பிடித்த சிங்கங்களை ஊமையாக்கி போட்டது. சிங்கம் போல கவனியுங்கள், சிங்கம் அல்ல; சிங்கம் மாதிரி சும்மா உறுமி கொண்டிருக்கின்ற சாத்தானுக்கு நாம் ஏன் பயப்பட வேண்டும்? விசுவாச உறுதியுடனே தைரியமாக நின்று வெற்றிப்பெறுவோம். **1 பேதுரு 5:8–9** “தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.”

நமது விசுவாசம் மாயமுள்ளதாக இராமல், அதாவது, எல்லா சூழலிலும் ஒரே மாதிரியாக நிலையானதாக இருக்க வேண்டும் **(2 தீமோத்தேயு 1:4)**. அது கர்த்தருடைய வசனத்தினாலே நமக்குள்ளே கருவாகி, உருவானதாக இருக்க வேண்டும் **(ரோமர் 10:17),** அப்பொழுது தான் அது குறைவின்றி ஆரோக்கியமானதாக இருக்க முடியும் **(தீத்து 1:14)**. நாம் பெற்றுள்ள விசுவாசம் அருமையானது **(2 பேதுரு 1:1):** ஆகையால் அதில் உறுதியாக இருப்போம்! **(1 பேதுரு 5:9)**

## 6. தானியேல் கர்த்தருக்கு பிரியமானவராக இருந்தார்

**தானியேல் 9:23** “நீ மிகவும் பிரியமானவன், ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்க வந்தேன்; இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள்.”

இது உண்மையிலேயே ரொம்ப அருமையான பண்பு. அப்பா நம்மீதும் நாம் அப்பாவின் மீதும் பிரியமாயிருப்பது வேறு. அப்பாவின் பிரியத்தினை பெற்றுக்கொள்வது என்பது வேறு. பிள்ளை என்பதினாலே வருகின்ற அன்பிற்கும், பிரியமான பிள்ளை என்பதிலே உள்ள அன்பிற்குமான ஆழம் என்பது வேறு. தானியேலை கர்த்தருக்கு பிரியமானவராக, அதாவது கர்த்தரின் பிரியத்தினை பெற்றுக்கொண்டவராக நாம் அறிய முடிகின்றது.

கர்த்தருடைய பிரியத்தினை பெற்றுக்கொள்ள, அதாவது, கர்த்தருடைய பிள்ளைகளாக மாத்திரமல்லாமல், அவருக்கு பிரியமான பிள்ளைகளாக நம்மை நாம் உருவாக்கிகொள்வது எப்படி என்பது, மிகவும் எளிதான காரியம்தான். அப்பாவிற்கு என்ன பிடிக்குமோ, அதை நாமும் விருப்பத்துடன் உண்மையாக செய்யும்போது, அந்த அப்பாவின் பிரியமான பிள்ளைகளாகலாம்!

கர்த்தருக்கு என்ன பிடிக்கும்? அதை எப்படி அறிவது? அதுவும் மிக எளிமையான வழிதான். அவர் தனது விருப்பத்தினை வெளிப்படுத்தியுள்ளார். அதனை நாம் வேத வசனங்களில் இருந்து அறியலாம். அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்கள் அவருக்கு பிரியமானவர்கள் **(எபி 11:6):** அவரை துதித்து, தோத்தரிப்பவர்கள் அவருக்கு பிரியமானவர்கள் **(சங் 69:30–31):** ஊழியம் செய்கின்றது அவருக்கு பிரியமானது **(அப். 13:2, ரோமர் 12:11):** செய்த பாவத்திலிருந்து மனம் திருந்துகின்றவர்கள் **(எசே 18:23):** ஆலயத்தினை

கட்டுவது **(ஆகாய் 1:8):** இப்பொழுது ஆலயம் என்பது ஆத்துமாக்களாகிய நாம் தான்! ஆத்துமாக்களை இரட்சிப்பினை நோக்கி வழிநடத்தி கர்த்தரிடம் சேர்ப்பது அவருக்கு மிகவும் பிரியமானது.

### 7. தானியேல் உபவாசித்து ஜெபித்தார்

**தானியேல் 9:3–4** "நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி, என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவ அறிக்கைசெய்து: ஆ ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன் படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே."

உபவாசித்து ஜெபிப்பது என்பது ஒருவர் தனது ஆத்துமாவை தாழ்மைப்படுத்தவும், கர்த்தருக்குள் தனது உறவை புதுப்பிக்கவும், பெலப்படுத்தவும், தனது தாழ்மையையும் மனந்திரும்புதலையும் காண்பிக்க செய்யப்பட்டதாக வேதாகமத்தில் நாம் அநேக இடங்களில் வாசித்து அறிந்துகொள்ள முடியும் **(எஸ்றா 8:21–23; நெகேமியா 1:4–6)**.

உபவாசம் என்பது மற்றவர்களின் நலனில் அக்கறை உள்ளதாக இருக்க வேண்டும். **ஏசாயா 58:7–8** "பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவா எனக்கு உகந்த உபவாசம். அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்க முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்."

அது அந்தரங்கமானதாக செய்யப்பட வேண்டும் என ஆண்டவர் இயேசு கற்பித்தார். **மத்தேயு 6:16–17** "நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர்காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன்

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 120/-
No. 92 4421 4421

**வங்கிக் கணக்கில் செலுத்த,**

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

பிதாவுக்கே காணப்படும்படியாக , உன் தலைக்கு எண்ணெய்பூசி, உன் முகத்தைக்கழுவு."

பிரியமானவர்களே ! தானியேலின் வாழ்வு எப்பொழுதும் வெற்றியுள்ளதாக இருக்க, யார் ஆண்டாலும் அவனது காரியங்கள் வெற்றியாக இருக்க, அவர் தன்னை தீட்டுபடுத்தாதபடி தீர்மானம் செய்தார், கூடி ஜெபிக்கின்றவராக இருந்தார், ஆவியானவரால் நிறைந்திருந்தார், உண்மையானவராக இருந்தார், கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவராக இருந்தார், கர்த்தருக்கு பிரியமானவராக இருந்தார் மற்றும் உபவாசித்து ஜெபிக்கின்றவராக இருந்தார். நாமும் அவ்வாறு இருக்கும் பட்சத்தில், நம் வாழ்வையும் தானியேலைப் போல வெற்றியுள்ளதாக்கிக்கொள்ள முடியும்; ஏனெனில், நம் கர்த்தரிடத்தில் பட்சாதாபம் இல்லை **(ரோமர் 2:11)**.

அன்புடன்
**ஆசிரியர்**

# வெற்றிகரமான விசுவாச பெண்கள்

சகோதரி : பேபி ராஜா



கர்த்தரை பின்பற்றுகின்ற பிரியமான பிள்ளைகளுக்கும், சகோதரிகளுக்கும் ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரால் எனது அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் நாம், வெற்றிகரமான பெண்ணாக இருக்க என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து வேதாகமத்தின் துணைக்கொண்டு உங்களுடன் பகிர்ந்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சி.

நாம் ஒவ்வொருவருமே வெற்றிகரமான பெண்மணியாக இருக்கவே விரும்புவோம். அதிக விரக்திக்கும், வெறுப்புணர்ச்சிக்கும் சீக்கிரம் வயப்படுவது பெண்களாகிய நாம் தான். காரணம், தோல்விகள். வேதாகமத்திலே வெற்றிகரமான பெண்கள் அநேகர் இருக்கின்றனர். அவற்றில் சிலரிடமிருந்து வெற்றியின் சூட்சமங்களை கற்று நாமும் வெற்றிகரமாக மாற முயல்வோம்.

### 1. கீழ்ப்படிதலினால் வென்ற சாராள்

**1 பேதுரு 3:1–6** "அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்."

சாராள், கீழ்ப்படிதலினாலே தன் குடும்ப வாழ்வை வெற்றிகரமாக்கினது மட்டுமின்றி, வாக்குத்தத்தத்தின் மகனாகிய ஈசாக்கையும் பெற்றெடுத்தாள். அவள் தன் கணவனாகிய ஆபிரகாமை தனக்கு கீழ்ப்படிய செய்தபோது தோற்றுப்போனாள் **(ஆதி 16:1–6).** மாறாக, ஆபிரகாமிற்கு கீழ்ப்படிந்த போதோ, அவள் வாழ்வும், தலைமுறையும் வெற்றியுள்ளதாகியது **(ஆதி 21).** வேத வாக்கியங்கள் நம்மை கீழ்ப்படிதலினாலே நம்மை அலங்கரிக்க சொல்கின்றது. நமது கீழ்ப்படிதல் அநேகருக்கு, குறிப்பாக, இரட்சிக்கப்படாத நம் துணையும் கூட இரட்சிக்கப்பட வழிவகுக்கும் என சொல்கின்றது. கீழ்ப்படிதல் என்பது நம்மை நாமே மட்டுப்படுத்துவது அல்ல; அது அடிமைத்தனமும் அல்ல, அது நம்மை கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவும், கீழ்ப்படிதலினாலே கர்த்தருடைய கிருபையால் வெற்றியை பெற்று உயர்வதாகவும் இருக்கின்றது.

### 2. அன்பினால் வென்ற ரூத்

**ரூத் 1:16–18** "அதற்கு ரூத்; நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத்தி ரும்பிப்போவதைக்கு றித்து,எ ன்னோடேட பச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். அவள் தன்னோடே

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
2. M. ராஜா – கரூர்
3. M. ஜோனா – கரூர்
4. A. ஹானா ஜோதி – மதுரை
5. S. கனிஸ்கா – கரூர்
6. S. லக்ஷிதா – கரூர்
7. K. பிளஸ்ஸி தேவகிருபை – மதுரை.
8. P. அன்னாள் – மதுரை
9. P. டேனியல் – மதுரை

கூட வர மனஉறுதியாயிருக்கிறதைக் கண்டு, அப்புறம் அதைக்குறித்து அவளோடே ஒன்றும் பேசவில்லை."

ரூத் என்றால் 'தோழி' என்று பொருள். உண்மையிலேயே தோழமை மனப்பான்மை உள்ள பெண்மணிதான் இந்த ரூத். 'தோள் கொடுப்பான் தோழன்' என்பது போல, நகோமி தனது கணவனையும், தனது இரண்டு மகன்களையும் இழந்து அனாதையான கைம்பெண்ணாக நிற்கும் போது, ரூத் சொன்ன அன்பின் வார்த்தைகளை தான் நாம் மேலே வாசிக்கின்றோம். ரூத் அன்பினாலே தனது அத்தையை, தனது கணவன் போவாசை, மாத்திரமல்ல, நம்முடைய மனதினையும் அன்பினால் வென்றுவிட்டாள் என்று தான் சொல்ல வேண்டும். அவளது இந்த அன்பின் குணம், அவளை தாவீதின் தாத்தாவான ஓபேத்தினை பெற்றெடுக்க வழி செய்தது. ஆண்டவரின் வம்சவழியில் வந்த தாய்களில் இவளும் ஒருத்தியானாள் **(மத் 1:5)**.

### 3. விசுவாசத்தினால் வென்ற ராகாப்

**எபிரேயர் 11:31** "விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடே கூடச் சேதமாகாதிருந்தாள்."

யோசுவாவின் புத்தகம் 2ம் அதிகாரத்திலே நாம் ராகாப் என்னும் விசுவாசியை குறித்து ஆழமாக அறிய முடியும். கர்த்தரை பற்றிய அவளுடைய அறிவையும், கர்த்தர் மேல் கொண்ட பயத்தினையும் விசுவாசத்தினையும் நாம் அறிய முடியும். புராதான பட்டணமான எரிகோ மற்றும் அதன் வலிமைமிக்க கோட்டை சுவர், அதின் அரசன் மற்றும் குடிகள் என எல்லாம் அழிந்தாலும், ராகாப் மற்றும் அவளுடைய வீட்டார் காப்பாற்றபட்டதற்கான காரணம், அவளின் விசுவாசமே என ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ள வார்த்தைகளிலிருந்து நாம் அறிய முடிகின்றது.

அழிந்துப்போக வேண்டிய தனது குடும்பத்தினை, தனது விசுவாசத்தினாலே, அதாவது விசுவாச கிரியைகளினாலே – கர்த்தருடைய மனுஷர்களை ஏற்றுக்கொண்டது, அவர்களை பாதுகாத்தது, பத்திரமாக அனுப்பி வைத்தது, கர்த்தரே பெரியவர் பட்டணம் பிடிபடும் என்ற நிச்சயமான நம்பிக்கையினால் சிவப்பு நூல் கட்டியது என நிறைய சொல்லலாம். நாமும் நமது விசுவாச செயல்களினாலே நமது குடும்பத்தினை, உறவுகளை, நட்புகளை பாவத்தினாலே அழிந்துப் போய்விடாதபடி வசனத்தின்படி பாதுகாப்போம்.

### 4. நன்மையினால் வென்ற தொற்காள்

**அப்போ 9:36–40** "யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள். யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள். பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப் போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள்



அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள். பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி; 'தபீத்தாளே, எழுந்திரு' என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்."

தொற்காளை அவளுடைய நற்கிரியையினாலே வெற்றிகரமான பெண்மணியாக நாம் அறிகின்றோம். அவள் மரித்த போதும் அவளது நற்கிரியை, அவளைப் பற்றி அநேக பரிசுத்தவான்களை பேசவைத்தது. அவள் உயிரோடே எழுப்பப்பட்டது வெற்றி என நான் சொல்லவில்லை. ஏனெனில் அது வெற்றியின் வெளிப்பாடு. உண்மையான வெற்றி என்பது, அவள் தன் நன்மையினாலும் அநேக உள்ளங்களை வென்றெடுத்தது தான். நாம் நன்மை செய்யும்படி தான் படைக்கப்பட்டுள்ளோம் **(எபே 2:10)**. நம்மை நேசிப்பவர்களுக்கும், நம்மை விரோதிப்பவர்களுக்கும் நாம் நன்மை செய்ய வேண்டியவர்கள். அப்படி நன்மையினாலே வெற்றி பெற வேண்டியவர்கள் என்பதனை நினைவில் கொள்வோம் **(ரோமர் 12:20, 21)**.

### 5. அர்ப்பணிப்பினால் வென்ற மரியாள்

**லூக்கா 1:30–38** "தேவதூதன் அவளை நோக்கி; மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக; பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றான். அதற்கு மரியாள்; இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்."

மரியாள் கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை அற்பணித்து, அடிபணிந்ததாலே வெற்றிகரமான பெண்மணியாக இருக்கின்றாள். நாமும் நம்மை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அதிலே நிலைநிற்கும் போது, நமது வாழ்வும் வெற்றிகரமானதாக இருக்கும். மரியாள் பெற்ற கிருபையை (ஆண்டவரை பெற்றெடுக்கும்), இந்த உலகத்தில் பிறந்த, பிறக்க போகின்ற எந்த பெண்ணும் பெற முடியாது. ஆயினும், நமக்கான கர்த்தருடைய கிருபைகளை நாம் பெற்று, நமது வாழ்வை, நம் குடும்பத்தினை வெற்றிகரமாக உருவாக்கிக்கொள்ள முடியும். வேத வசனங்களும் நம்மை அவ்வாறே உற்சாகப்படுத்துகின்றது **(எபே 5:2)**.

அன்பான சகோதரிகளே, பிள்ளைகளே, வெற்றி பெறுதல் என்பது சண்டையிட்டு, யுத்தம் செய்து, இரத்தம் சிந்தி, போராடி பெறுவது அல்ல. அது நமது நல்ல குணங்களினாலே பெறுவதாகும். நமது ஆண்டவர் இயேசுவும் அவ்வாறே வெற்றி பெற்று நமக்கு முன்மாதிரியை வைத்துப்போயுள்ளார். அதனை நாம பின்பற்றி வெற்றிபெறுவோம் **(1 பேதுரு 2:21–25)**.

## சிறுவர்க்கான கேள்விகள்

1. தாவீது யாருடைய நாமத்தினாலே கோலியாத்தை எதிர்த்தான்?
2. கர்த்தர், தாவிதீன் துணை நின்று என்ன செய்தார்?
3. கர்த்தர் செங்கடலை என்ன செய்தார் ?
4. நமக்காக யுத்தம் செய்பவர் யார்?
5. எரிகோ மதில்கள் விழுந்தது எப்படி?

# வெற்றியோ கர்த்தரால் வரும் - கிதியோன்

நியாயாதிகள் 7:8-21

பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே, இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதம் கிதியோனின் மூலமாக கர்த்தருடைய ஆலோசனையை கற்றுக் கொள்வோம்.

நியாயாதிபதிகள் 7ம் அதிகாரத்தில் 3 காரியத்தை கிதியோன் மூலம், நம்மால் கற்றுக்கொள்ள முடியும் அவை துறவு, அடிமைத்தனம், வேண்டுதல்.

இஸ்ரவேல் மக்கள் கர்த்தரின் பார்வையில் தீமை செய்தனர். அதனால் கர்த்தர் அவர்களை ஏழு வருடங்களுக்கு மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார். பின்னர் மீதியானியரை கிதியோன் என்னும் நியாயதிபதியை கொண்டு முறியடித்து இஸ்ரவேலை மீட்கும்படி செய்கிறார்.

மிகப்பெரும் படையாகிய மீதியானியரை, வெறும் 300 பேர் கொண்ட கிதியோனின் படை வெல்கிறது. இந்த வெற்றியில் கர்த்தரின் பலமும், மனிதனின் குறுகிய ஆற்றலும் தெரிகிறது.

கர்த்தர் ஏற்கனவே கிதியோனின் ராணுவத்தை 32,000த்திலிருந்து 10,000ஆக குறைத்தார். பின்னும் அவர், அதை 10,000 லிருந்து 300ஆக குறைத்தார். நம்முடைய சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் சாத்திய நிலையில் கர்த்தரை நம்புவது, இயல்பான ஒன்றாகவே உள்ளது. ஆனால் இலக்கு கடினமாகவும், நம் திறன் குன்றியிருக்கும் போது இன்னும் அதிகமாக, சோதனையாக இருக்கும் போது நம்புவது தான் நம் வாழ்வில் வெற்றிகளும், நினைத்துப்பார்க்க முடியாத பெரிய காரியங்களும் நடைபெற உதவும். இங்கே கிதியோன் மூலமாக, வெறும் 300 இஸ்ரவேலைக் கொண்டு மாபெரும் மீதியானியப் படையை வீழ்த்தி, கர்த்தர் வெற்றி பெற்றார். இந்த வெற்றி கர்த்தருடையது. நம்முடையவைகளை நம்புவதைவிட, கர்த்தரை அதிகமாக நம்பும் இடத்திற்கு கடந்து வருவோம்.

அன்பான வாலிபர்களே, நம்முடைய பலத்தினால் அல்ல, கர்த்தருடைய ஆவியினால் எல்லாம் ஆகும் என்று விசுவாசிப்போம் **(சகரியா 4:6)**. கிதியோன் தன் சுய பலத்தைவிட, கர்த்தரின் வார்த்தை சொன்னபடி செய்ததால், வெல்ல முடியாத மாபெரும் படையை, ஆற்றல் இல்லாத பொருட்களை கொண்டும், சொற்ப வீரர்களை கொண்டும் வெல்ல முடிந்தது.

நாம் மேன்மை பாராட்டுவது கர்த்தருடைய நாமமாய் இருக்கட்டும்!

நம் எதிராளியான பிசாசை கண்டு பயப்பட வேண்டாம்.தேவ பெலத்தால் எதிர்த்து நிற்போம். வேத ஆராய்ச்சி, குடும்ப ஜெபம் என எல்லா ஆவிக்குரிய நிகழ்விலும் பங்கு பெறுவோம். கர்த்தர் வெற்றி கொடுப்பார். நம்மிடம் இருப்பது கடுகளவு விசுவாசமாக இருக்கலாம். ஆனால் நாம் நம்புவது சர்வ வல்ல தேவன். அவரை நம்புகிற சிறு விசுவாசத்தின் மூலம் நம்மிடம் பெரிய காரியங்களை அவரால் செய்ய முடியும்.

*பொதுவான செய்திகள்*

## பதிற்றுப்பத்து

- பதிற்றுப்பத்து எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். இது, சேர மன்னர்கள் பதின்மறைப் பற்றி பத்துப்புலவர்கள் பத்துப் பத்தாகப் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும்.
- இந்த நூலில் முதற்பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. ஆயினும் ஏனைய எட்டுப் பத்துகளே கிடைத்துள்ளன.
- இந்த எண்பது பாடல்கள், இரண்டு சேரர் மரபைச் சேர்ந்த எட்டுச் சேர மன்னர்களின் வரலாற்றை எடுத்துரைக்கின்றன.
- உதியஞ்சேரல் வழித்தோன்றல்களான ஐந்து சேர மன்னர்களும், அந்துவஞ்சேரல் இரும்பொறை வழித்தோன்றல்களான மூன்று சேர மன்னர்களும், ஆக மொத்தம் எட்டு பேர் பற்றிய வரலாற்றையே நமக்குக் கிடைக்கப் பெற்ற பதிற்றுப்பத்து எண்பது பாடல்கள் வாயிலாகப் பெறமுடிகிறது.
- இந்நூல் பாக்கள் அகவாழ்வோடு இணைந்த புறவாழ்க்கையோடு தொடர்புடைய புறப்பொருள் பற்றிவை ஆகின்றன.
- சேர மன்னர்களின் குடியோம்பல் முறை, படை வன்மை, போர்திறம், பகையரசர்பால் பரிவு, காதற் சிறப்பு, கல்வித்திறம், மனத்தின்மை, புகழ்நோக்கு, ஈகைத்திறம், கலைஞர் காக்கும் வெற்றி ஆகிய பண்புகளையும், கவிஞரைக் காக்கும் பண்பு பெண்களை மதிக்கும் மாண்பு ஆகிய ஆட்சி திறன்களையும் சித்தரிக்கின்றன.

# கோலியாத்தை ஜெயித்தல்

கடவுளின் செல்லங்களா! கர்த்தருடைய செல்லப்பிள்ளைகளா! எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்? நல்லாயிருக்கிறீர்களா?

இப்பொழுது நாம் என்ன கற்றுக்கொள்ளப்போறோம் தெரியுமா? கோலியாத் என்னும் பெரிய இராட்சத வீரனை, நமது அண்ணன் தாவீது எப்படி ஜெயித்தார்கள் என்பதை பற்றி கற்றுக்கொள்ள போகின்றோம்.

பெலிஸ்தியர்கள் இஸ்ரவேல் மக்களோடு யுத்தம் செய்ய வந்தனர். ஏலாமில் ஒரு மலையின்மேல் பெலிஸ்தரும், இன்னொரு மலையில் இஸ்ரவேல் வீரர்களும் இருந்தார்கள். இடையில் பள்ளத்தாக்கு இருந்தது. வீரர்கள் சண்டையிட தயாராக இருந்தார்கள். பெலிஸ்திய படையில் கோலியாத் என்னும் வீரன் இருந்தான். அவன் காத் என்னும் ஊரை சேர்ந்தவன். அவன் ஒன்பது அடி உயரமாக இருந்தான். ஒரு வெண்கல கிரீடமும் மிக கனமான போர்க்கவசமும் தரித்திருந்தான். அவன் கால்களில் வெண்கல கலசத்தையும், தோள்களில் வெண்கல கேடகத்தையும் அணிந்திருந்தான். அவன் ஈட்டியின் பிடி நெசவுக்காரரின் படைமரம் போல் உயரமாகவும் எடை நிறைந்ததாகவும் இருக்கும். தினந்தோறும் அவன் வெளியே வந்து இஸ்ரவேலரைப் பார்த்து. "ஒத்தைக்கு ஒத்தை வாங்க" என சத்தமாக சண்டைக்கு வரும்படி சவால் விடுவான்.

ஒருநாள் தாவீது, தன் தகப்பன் ஈசாய் சொன்னதால், ராணுவ வீரர்களான தன் அண்ணன்களின் நலம் விசாரிக்க, போர் நடக்கும் இடத்துக்கு சென்றான். அங்கு கோலியாத், கர்த்தரை நிந்திப்பதை பார்த்து, மிகவும் கோபமடைந்து, நான் இவனோடு போர்செய்கிறேன் என்றான்.

அண்ணன்கள் அதட்டுகிறார்கள், சிலர் கேலி செய்கின்றனர், அரசனாகிய சவுலோ, நீ இளைஞன் உன்னால் முடியாது என்கின்றான். ஆனால், தாவீதோ, கர்த்தருடைய நாமத்தினை நிந்தித்த, இந்த பெலிஸ்தியனை வெற்றி பெற கர்த்தர் எனக்கு துணை செய்வார். நான் நிச்சயம் வெல்வேன் என உறுதியாக கூறினான்.



கோலியாத்தும் தாவீதை கேலி செய்தான். உன்னை கொன்று உன் உடலை காட்டு மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் உணவாக கொடுப்பேன் என கர்ஜித்தான். தாவீதோ, கோலியாத்தே நீ கத்தியோடும், ஈட்டியோடும் வருகிறாய். நான் நீ நிந்தித்த உயிருள்ள கர்த்தருடைய பெயராலே வருகின்றேன் என சொல்லி, தனது கவனையும் 5 கூலாங்கற்களையும் கொண்டு சென்றான். கர்த்தர் தாவீதின் துணை நின்று ஒரு மாபெரும் இராட்சத மாவீரனான கோலியாத்தினை ஒரு சிறிய கல்லினாலே வெற்றி பெற செய்தார்.

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா, தாவீது அண்ணனைப் போல் ஜீவனுள்ள கர்த்தரின் துணைக் கொண்டு முயற்சி செய்து, உங்களை தோற்கடிக்க வரும் எல்லா தீமையையும் தோற்கடித்து வெற்றி பெறுங்கள். மலை போன்ற துன்பங்கள் எது வந்தாலும் கர்த்தர் மீதுள்ள உங்கள் விசுவாசத்தினை விட்டுவிட வேண்டாம். வெற்றி நமதே. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம் : 2கொரி 2:14** "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்."

**– அன்பு ஏசுதாஸ்**

# செங்கடலும், இஸ்ரவேலரும்

சிறுவர் பகுதி



ஹாய் குட்டீஸ் ! உயிர்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். தேவனுடைய ஜனங்களான இஸ்ரவேலர்கள் எகிப்து என்ற தேசத்தில் 430 வருடங்கள் அடிமைகளாக இருந்தார்கள். அவர்களை மீட்டு சொந்த தேசத்திற்கு அழைத்து செல்வதற்கு தேவன் மோசே என்பவரை தெரிந்துகொண்டார். அவர்கள் ஒரு வழியாக எகிப்து நாட்டிலிருந்து புறப்பட்டு வெளியே வந்தார்கள். அப்போது நடந்த சம்பவத்தை தான் நாம் இந்தமுறை படிக்கப்போகிறோம்.

எகிப்து தேசத்தை விட்டு புறப்பட்ட இஸ்ரவேலர்கள் முன்பாக அவர்கள் போகவேண்டிய வழியில் பெரிய கடல் ஒன்று தடையாக நின்றது. இங்கே எகிப்து தேசத்திலே பார்வோனும் அவன் சேனையும் நம்மிடம் அடிமைகளாக இருந்த எல்லா இஸ்ரவேலரையும் அனுப்பிவிட்டோமே யார் நம் வேலைகளை பார்ப்பதென்று எண்ணி மீண்டும் பிடித்துக்கொள்ளும் படி அவர்களை பின்தொடர்ந்து வந்தார்கள்.

முன்பாக செங்கடல் பின்னாக திரும்பினால் எகிப்தியரின் சேனை இதை கண்டு மிகவும் கலங்கின இஸ்ரவேலர்கள் தங்களை வழி நடத்தி வந்த மோசேயை நோக்கி; எங்களை அழித்துப் போடுவதற்காகவா எகிப்திலிருந்து விடுதலை பண்ணி அழைத்து வந்தீர் என்று முறையிட்டார்கள். அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி பயப்படாதிருங்கள்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் என்றான்.

கர்த்தர் மோசேயை நோக்கி; உன் கோலை ஓங்க உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு என்றார். மோசே அப்படியே செய்தார். செங்கடலின் தண்ணீர் இரண்டாக பிளந்து நின்றது. தேவ ஜனமாகிய இஸ்ரவேலர் வெட்டாந்தரையிலே நடந்து கடலை கடந்து வந்தார்கள். அவர்களை பின் தொடர்ந்து வந்த எகிப்தியரின் சேனை வெட்டாந்தரையிலே கடக்க முயன்றபோது இரண்டாக பிளந்து நின்ற தண்ணீர் ஒன்றாகி அவர்களை அழித்துப்போட்டது.

பார்த்தீங்களா குட்டீஸ் ! முன்னாடி செங்கடல் பின்னாடி பெரிய படை என்ன செய்யபோகிறோம் என்று பயந்த இஸ்ரவேலர்களோடு கர்த்தர் இருந்ததினால் அவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். நம் வாழ்க்கையிலும் செங்கடலை போலவும், எகிப்தியரின் படையைப் போன்ற சூழ்நிலை வந்தாலும் கர்த்தர் நம்மோடிருந்தால் நாமும் வெற்றி பெறலாம்.

**மனப்பாட வசனம் : சங் 91:7** “உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.”

**– குயினி பிரதீப்**

# எரிகோ மதில்கள்

சிறுவர் பகுதி

அன்பான மழலை செல்லங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பெயரால், அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் இஸ்ரவேல் மக்கள், கர்த்தருடைய உதவியால் எரிகோவை எப்படி வெற்றி பெற்றனர் என்பதனை குறித்து தெரிந்துகொள்வோமா?

எரிகோ என்பது மிகவும் பழமையான பட்டணம் மற்றும் ரொம்பவும் வலிமையான பட்டணம். சுமார் 4000 ஆண்டுகளுக்கு மேலாக அதே பெயருடன் இன்னும் இருக்கின்ற ஒரு பட்டணமாகும். இஸ்ரவேல் மக்கள் கர்த்தருடைய உதவியால் ஒவ்வொரு நாட்டையும் ஒவ்வொருவிதமாக வெற்றி பெற்று வந்தனர். எரிகோ பட்டணத்தினை வெற்றிக்கொள்ள வந்தபோது, எரிகோ பட்டணத்திற்குள் அவர்கள் உள்ளே செல்ல முடியாதபடி, ஒரு மாபெரும் கோட்டை சுவர் பட்டணத்தினை சுற்றிலும் இருந்தது. அது அவர்களுக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது.

கர்த்தர் யோசுவாவை நோக்கி; எரிகோவையும் அதின் ராஜாவையும் யுத்தவீரரையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தேன். யுத்தபுருஷராகிய நீங்கள் அனைவரும்

பட்டணத்தைச் சூழ்ந்து ஒருதரம் சுற்றிவாருங்கள்; இப்படி ஆறுநாள் செய்யக்கடவீர்கள். ஏழு ஆசாரியர்கள் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக்கொண்டு போக வேண்டும்; ஏழாம்நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கடவர்கள்; ஆசாரியர் எக்காளங்களை ஊத வேண்டும். அவர்கள் அந்தக் கொம்புகளினால் நெடுந்தொனி இடும்போதும், நீங்கள் எக்காளச் சத்தத்தைக் கேட்கும்போதும், ஜனங்கள் எல்லாரும் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கக்கடவர்கள்; அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்துவிழும்; உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நேராக ஏறக்கடவர்கள் என்றார்.

இஸ்ரவேல் மக்கள் கர்த்தர் சொன்னபடியே செய்தார்கள். என்ன ஆச்சரியம்! ஏழாம் நாள் ஏழாம் முறை சுற்றி வந்து மக்கள் அனைவரும் ஆர்ப்பரித்த போது, வலிமையான கோட்டை இடிந்து விழுந்தது. இஸ்ரவேல் மக்கள் மிகவும் எளிதாக வென்றனர்.

மழலைச் செல்லங்களே, நாம் அனைவரும் கர்த்தருடையவர்கள். கர்த்தர் நம் கூடவே இருக்கின்றார். நாம் அவர் சொல்வதை கேட்டு நடக்கும் போது, எரிகோ கோட்டை போன்ற தடைகள் எல்லாவற்றையும் மிகவும் எளிதாக வென்றுவிடலாம். நாம் செய்ய வேண்டியதை நாம் செய்வோம். கர்த்தர் செய்ய வேண்டியதை அவர் செய்வார். ஆகையால், ஆண்டவர் இயேசு நமக்கு என்ன சொல்லியிருக்கின்றாரோ அவைகளை எல்லாம் செய்து, வெற்றியாளர்களாக இருப்போம்.



**மனப்பாட வசனம் : நீதிமொழி 21:30–31** “கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை. குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்.”

**– பிரியா ஆண்டனி**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : 92 4421 4421 & 92 4431 4431) **Nambikai TV :** Every Sunday 3.30 p.m. **Salvation TV :** Every Sunday 2.00 p.m.

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

## அக்டோபர் மாத கேள்விகள்

1. தரியு மற்றும் கோரேசின் காலத்தில் தானியேலின் காரியம் அரசுகள் மாறியபோதும் தானியேலின் காரியங்கள் எப்படி இருந்தது?
2. எவைகள் மனிதனை தீட்டுப்படுத்தும் என ஆண்டவர் சொன்னார்?
3. பரிசுத்த ஆவியின் ஆலயமாக இருக்கின்றது எது?
4. கர்த்தர் எது தனக்கு உகந்த உபவாசம் என்று சொன்னார்?
5. பூர்வத்திலே பரிசுத்த பெண்கள் தங்களை எப்படி அலங்கரித்தார்கள்?
6. விசுவாசத்தினாலே ராகாப் என்ன செய்தார்?
7. ஜெயமோ யாரால் வரும்?
8. இரண்டு அல்லது மூன்று பேர் ஒருமனப்பட்டு ஜெயித்தால் என்ன உண்டாகும்?
9. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு தேவன் என்ன கொடுக்கின்றார்?
10. தேவனால் பிறப்பதெல்லாம் எதை ஜெயிக்கும்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-11-2021**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. சங் 150:6 | 6. லூக்கா 6:35 |
| 2. சங் 34:1 | 7. நீதி 14:22 |
| 3. எபே 4:29 | 8. லூக்கா 1:46 |
| 4. யாக் 3:10 | 9. ரோமர் 2:10 |
| 5. கொலோ 3:17 | 10. பிலி 2:5 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் – நெல்லை
2. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
3. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
4. S. சூசை மரியான் – சென்னை
5. Mrs. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
6. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
7. Mrs. சாந்தி ஜோயஸ் – திருச்சி
8. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
9. S. அன்னதாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
10. Mrs. P. சமாதானம் பீட்டர் – திருச்சி
11. Mr. ஜெபர்சன் – திண்டுக்கல்
12. Mr. டேவிட் சாந்தகுமார் – செங்கோட்டை
13. Mrs. ஜெயமணி ராஜாம்மாள் – கடலூர்
14. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
15. D. மீனாள் – மூலனூர்
16. Mrs. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
17. Mrs. மேரி ராஜ் – மதுரை
18. Mrs. ஹெலன் திலக் – மதுரை
19. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
20. D. வர்ஷினி – மூலனூர்
21. Mrs. நாகலிங்கம் சித்ரா – திருச்சி
22. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
23. J.V. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
24. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
25. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
26. Mrs. A. ரோஸ்மேரி – சென்னை
27. Mrs. குளோரி திலகவதி – சென்னை
28. Mrs. K. ராணி மூர்த்தி – நெல்லை
29. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
30. J. ரேவதி ஜெயசந்திரன் – கரிமேடு
31. P. பரமேஸ்வரி – மூலனூர்
32. Mrs. M. ஜெனி – கரூர்
33. D. தேன்மொழி – மூலனூர்
34. D. விக்னேஷ் – மூலனூர்
35. R.P. டேவிட் – சேலம்
36. Mrs. பாக்கியராஜம் – மதுரை
37. Mr. G.J. அப்பாதுரை – நெல்லை
38. J. ஜான்சி – ஆனைமலை
39. Mrs. லீலா ஜோசப் – கோவை
40. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
41. Mrs. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
42. Mr. ஜேம்ஸ் – திண்டுக்கல்
43. Mrs. செல்வமணி – சேலம்
44. Mrs. ஞானசிரோன்மணி – மதுரை
45. P. வசந்த் – குன்னூர்
46. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – மதுரை
47. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
48. P. சூரிய பிரியா – திருமங்கலம்

Place of Publication : **Arasaradi, Madurai**
**Printed & Published by P.C. PHILEMON RAJAH**
**Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2021 - 2023**
**Date of Publication : 8th October 2021**
**Posted at Arasaradi HPO on 10th 11th October 2021**


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்








அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்






உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH











**AVAILABLE FOR SPECIAL PRICE!**


**If undelivered please return to :**

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers